## கோயம்புத்தூர் விற்பனைக்குழு முதுநிலை செயலாளரின் செயல்முறைகள்

## உத்தரவு பிறப்பிப்பவர் : திரு.சு.ஆறுமுக ராஜன்., எம்.எஸ்சி., பி.எட்.,

செ.மு.ஆ.எண்.ஆ1/4692/2023 நாள்.15.04.2025

| | |
|---|---|
| பொருள்: | பணியமைப்பு – கோயம்புத்தூர் விற்பனைக்குழு – இளநிலை உதவியாளர் – செல்வி.ஆ.புனிதா அபிராமி – இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து உத்தரவிடுதல் – தொடர்பாக. |
| பார்வை: | 1. அரசாணை எண் 978 வேளாண்மை (AM–III) துறை நாள்.23.05.1985.<br>2. தமிழ்நாடு அரசுபணியாளர் தேர்வாணைய செயலாளர் அவர்களது கடித எண். 1906/PSD–B1/2023, நாள்.07.08.2023.<br>3. முதுநிலை செயலாளர், கோயம்புத்தூர் விற்பனைக்குழு கோயம்புத்தூர் அவர்களின் செயல்முறை ஆணை. எண் ஆ1/4692/2023, நாள்.07.09.2023 |

*****

உத்தரவு

பார்வை (1)இல் காணும் அரசாணையின்படி, விற்பனைக்குழுவின் இளநிலை உதவியாளர் பதவி தமிழ்நாடு தேர்வாணையத்தின் தெரிவுக்குட்பட்டும், அவ்வாறு பணியமர்த்தப்படும் இளநிலை உதவியாளர் பதவிக்கு, சம்பந்தப்பட்ட விற்பனைக்குழுவின் செயலாளர் **"பணி நியமன அலுவலர்"** என்றும் அறிவித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை (2)இல் காணும் கடிதத்தின்படி, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் இளநிலை உதவியாளர் பதவிக்கு செல்வி.ஆ.புனிதாஅபிராமி, தெரிவு செய்யப்பட்டு கோயம்புத்தூர் விற்பனைக்குழுவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டார்.

பார்வை (3)இல் காணும் இவ்வலுவலக உத்தரவின்படி, தனியர் கோயம்புத்தூர் விற்பனைக்குழுவில் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்டார். அதனடிப்படையில் தனியர் கோயம்புத்தூர் விற்பனைக்குழுவின் கட்டுப்பாட்டில் உள்ள தொண்டாமுத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் இளநிலை உதவியாளர் பணியில் 11.09.2023 முற்பகல் பணியில் இணைந்துள்ளார்.

இவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் இணைந்த நாளான 11.09.2023 முற்பகல் முதல் தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து, உத்தரவிடப்படுகிறது. மேலும் தனியரின் பணியினை தொடர்ச்சியான மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தில் வைத்து உத்தரவிடப்படுகிறது.

இவரது தகுதிகாண் பருவகாலத்திற்குள், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்தும் (I).தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வு, (II).வேளாண்மை விற்பனைத்துறை பணியாளர்களுக்கான துறைத்தேர்வு மற்றும் (III).பவானிசாகர் அடிப்படை பயிற்சி ஆகியவற்றில் தேர்ச்சி பெற வேண்டும் என நிபந்தனை விதித்து உத்தரவிடப்படுகிறது. தவறினால் தகுதிகாண் பருவ காலம் நீட்டிப்பு ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

த.பி.பா..

இந்த பணி வரன்முறை உத்தரவு கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டது என அறிவிக்கப்படுகிறது.

"The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in combined Civil Services Examination – IV"

மேலும் பணிவரன்முறை ஆணையை பெற்றுக்கொண்டமைக்கு உடன் ஒப்புதல் வழங்கிட செல்வி.ஆ.புனிதாஅபிராமி, இளநிலை உதவியாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

15/4/25

முதுநிலை செயலாளர்
கோயம்புத்தூர் விற்பனைக்குழு
கோயம்புத்தூர்

<u>பெறுநர்:</u>
செல்வி.ஆ.புனிதா அபிராமி,
இளநிலை உதவியாளர்,
தலைமை அலுவலகம்.

15/4/25

<u>நகல்:</u>
1. அ4–பிரிவு.
2. இருப்புக்கோப்பு.
3. பணிப்பதிவேடு.
4. மேலாளர் – மேசைக்கு.

<u>நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.</u>

ஆணையர்,
வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை,
சென்னை – 32.